வாக்குமூலம்
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்
வழக்கு எண் : CC135 of 2018
வழக்கு சாட்சி – PW –11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஆறுசாமி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | பொன்னுசாமி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19.11.2025.
(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 19.11.2025.**

1) நான் தற்போது காவல் ஆய்வாளராக இருந்து விருப்ப ஓய்வு பெற்று தற்போது கோபிசெட்டிபாளையத்தில் குடியிருந்து கொண்டு வருகிறேன். கடந்த 26.08.2016 ம் தேதி அவினாசி பாளைய காவல் நிலையத்தில் நான் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அவினாசிபாளைய குற்ற எண். 507/2016 சட்டப்பிரிவு 279.338,304(A) இதச வழக்கினை அப்போதைய காமநாயக்கன்பாளைய ஆய்வாளர் திரு. தெய்வசிகாமணி என்பவர் அவினாசிபாளையம் காவல்நிலையத்தில் பொறுப்பு ஆய்வாளராக பணி செய்த போது மேற்படி இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 26.08.2016 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சி ராமசாமி என்பவர் சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் லோகநாதன்,. சிவசாமி, ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.**அந்த மாதிரி வரைபடம் அ.த.சா. 4.** பின்னர் சாட்சிகள் லோகநாதன்,. சிவசாமி, ராமசாமி, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றே காலை 8.30 மணிக்கு பல்லடம் அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் இறந்து போன கார்த்தி என்பவர் பிரேத்தின் முன்பு சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில்

காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரை பிரேத விசாரனை செய்து அறிக்கை தயார் செய்துள்ளார். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ 5 ஆகும்.** பின்னர் பிரேதத்தினை பரிசோதனை செய்ய வேண்டி காவலர் கருப்புசாமி என்பவர் மூலம் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் சாட்சிகள் முத்துசாமி, பொன்னுசாமி, பாராதி. லோகநாதன், ரவிச்சந்திரன். ஆகியோரை விசாரித்து வா'க்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 28.08.2016 ம் தேதி கோவை கே.எம்.சி.எச், மருத்துவமனை முன்பு அங்கு சிகிச்சையில் இருந்த சாட்சி குர்சித் பேகம் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ 6 ஆகும்.**

2) பின்பு 02.09.2016 ம் தேதி இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 30 AA 9100 பதிவெண் உள்ள Swari Car அதனை ஓட்டி வந்த எதிரி அகமதுல்லா என்பவரையும் கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். மேற்படி காரை 20.09.2016 ம் தேதி மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு 17.10.2016 ம் தேதி விபத்தில் இறந்து போனவர் ஓட்டி வந்த TN 39 AD 0478 TVS மோட்டார் வாகனத்தினை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பிவைத்துள்ளார். இவ்வழக்கினை நான் கடந்த 29.03.2018 ம் தேதி அவினாசிபாளைய காவல்நிலையத்தில் புலன்விசாரணை எடுத்துக் கொண்டு வழக்கின் சம்பவ இடம் சென்று விசாரணை செய்தபோது அங்கு சாட்சிகள் ஆய்வாளர் தெய்வசிகாமணி கூறிய விபரத்தையே என்னிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

3) பின்னர் இவ்வழக்கின் இறந்துபோன கார்த்தி என்பவரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் வித்யா முருகன் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ 7 ஆகும்.** பின்னர் கோவை கங்கா மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம் பெற்று சரவணன் என்பவரின் காயச்சான்றிதழ் பெற்று மருத்துவர் ராய்வில்சன் என்பவரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த காயச்சான்றிதழ் அ.தசா.ஆ 8 ஆகும்.** பின்னர் கோவை கே.எம்.சி.எச் மருத்துவமனை சென்று மருத்துவமனை மருத்துவர் கேசவமூர்த்தி என்பவரை விசாரித்து குர்சித் பேகம் என்பவரின் காயச்சான்று பெற்று பதிவு செய்தேன். **அந்த காயச்சான்றிதழ் அத.சா.ஆ 9 ஆகும்.**

4) பின்னர் திருப்பூர் வட்டார போக்குவரத்து அலுவலகம் வந்து இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த TN 30 AA 9100 மற்றும் இவ்வழக்கில் இறந்து போனவர் ஓட்டி வந்த TN 39 AD 0478 TVS வாகனத்தினை ஆய்வு செய்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. நடேசன் என்பவரை விசாரித்து செய்து ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.த.சா.ஆ 10 மற்றும் 11 ஆகும்.** பின்பு இவ்வழக்கினை புலன் விசாரணை 29.03.2018 ம் தேதி முடித்து எதிரி மீது சட்டபிரிவு 279,338,304(A) இதச–பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

மறுவிசாரணை இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.11.19 16:53:04 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.